மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Sulundhi Novel and Tamil Medicine

Dr. P. Lenin

Assistant Professor, Department of Tamil, Loyola College, Chennai, India

Manuscript ID :
MT198A0112

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 05.01.2023
Revised: 04.02.2023
Accepted: 22.02.2023
Published: 27.02.2023

Pages : 55-63

DOI:
10.5281/zenodo.7679708

ABSTRACT:

Creative literature tends to interpret writing as politics and politics through writing. If we read his work without understanding the creator, the work becomes meaningless. It is important not only to re-read history because of the blind belief that creative literature is only fiction, but also to study from a critical perspective based on various social structures such as mythology, customs, politics, society, economy through literature.

This article examines the Tamil medical methods in sulundhi novel and explains the pharmacological technique related to this medicine.

KEYWORDS:

Diseases, Tamil Medicines, Pharmacology

சுளுந்தீ நாவலும் தமிழ் மருத்துவமுறைகளும்

முனைவர். பி. லெனின்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

எழுத்தை அரசியலாகவும் அரசியலை எழுத்துக்கள் மூலமாகவும் விளக்க முனைவது படைப்பிலக்கியமாகும். படைப்பாளியைப் புரிந்து கொள்ளாது அவனது படைப்பினை வாசித்தோமானால் நாதமற்றதாகிவிடும் அப்படைப்பு. படைப்பிலக்கியம் என்பது புனைவுகள் மட்டுமே என்ற கண்மூடித்தனமான நம்பிக்கையின் காரணமாக வரலாற்றை மறுவாசிப்பு செய்வதோடு மட்டுமல்லாது இலக்கியத்தின் வாயிலாக தொன்மம், பழக்க வழக்கங்கள், அரசியல், சமூகம், பொருளாதாரம் என பல்வேறு சமூகக் கட்டமைப்புகள் சார்ந்த திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதும் முக்கியமாகும்.

சுளுந்தீ நாவலில் தமிழ் மருத்துவமுறைகளை ஆய்வதாகவும் அம்மருத்துவம் சார்ந்த மருந்தியல் நுட்பத்தினை விளக்குவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

நோய்கள், தமிழ் மருத்துவமுறைகள், மருந்தியல் நுட்பம்

முன்னுரை

பண்டையத் தமிழகத்தில் மருந்தும் மருத்துவமும்

அறுவை மருத்துவம்

போர்க் காலங்களில் போர்வீரர்களுக்கு ஏற்படுகின்ற விழுப்புண் பெரிய அளவில் இருந்தால் அப்புண்ணை மருந்துகளால் ஆற்றுவது கடினம் என்பதை உணர்ந்து மருத்துவ வல்லார்களால் அப்புண்கள் தைக்கப்பட்டன. அதன் பின்னரே மருந்திட்டுக் கட்டுவதும் நிகழ்ந்துள்ளது. இதுவே இன்றைய நாளிலும் நடைமுறையிலுள்ளது. இவ்வாறு, விழுப்புண்ணைத் தைக்கும் முறையைப் பதிற்றுப் பத்து குறிப்பிடுகிறது.

> **“மீன்தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்**
> **சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி**
> **நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்”** **பதிற்றுப்பத்து.** 5:2:1-3

நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்காக நீரில் பாய்ந்து, அடுத்த நொடியில் நீரைவிட்டு மேலே பறந்து செல்லும் சிரல் பறவையைப் போல, நெடிய வெள்ளூசி புண்ணுக்குள் நுழைந்து வெளியே வருகிறது என்கிறது. வெள்ளூசி என்பது வெள்ளியால் செய்யப்பட்ட தையல் ஊசியாக இருக்கலாம்.

மருந்துப் பொருள்கள்

இரசம், தாளகம் ஆகிய இரண்டும் சீனம், கிரேக்கம், இத்தாலி போன்ற மேலை நாடுகளில் உற்பத்தியாகின்றன. ஆனால் சங்க காலப் புலவராகிய நற்றத்தனார் - தாளகம், நளிர் சுரத்திற்கு மருந்தென்று குறிப்பிடுகின்றார்.

சக்தி பீசம் என்று கூறப்படுகின்ற கந்தகம், கந்தக பற்பம் என்னும் மருந்தைப்பற்றி மருத்துவ ஆற்றுப்படை என்னும் சங்க பாடல் குறிப்பிடுகிறது. கந்தகத்தினால் செய்யப்படுகின்ற மருந்து பால்வினை நோய்க்கும் உணவினால் ஏற்படக்கூடிய நஞ்சு நோய்க்கும் மருந்தாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இங்குலிகம் (சாதிலிங்கம்)

தமிழில் இங்குலிகம் என்று கூறப்படுகின்ற சாதிலிங்கம் சீனத்திலிருந்து இறக்குமதியாவதாகக் கூறப்படுகிறது. அந்த சாதிலிங்கம் பற்றிய குறிப்பு சங்ககால நூலில் காணப்படுவது சிறப்பாகும்.

> **“அஞ்சனக் குன்றுஏய்க்கும் யானை அமர் உழக்கி**
> **இங்குலிகக் குன்றேபோல் தோன்றுமே - செங்கண்**
> **வரிவரால் மீன் பிறழும் காவிரி நாடன்**
> **பொருநரை அட்ட களத்து”** **களவழி நாற்பது**. 7

சிவந்தக் கண்களையுடையவரால் மீன்கள் தவழுகின்ற காவிரி நாடனாகிய சோழன் செங்கணான், தன் பகைவரோடு போர் புரிந்த போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் கருமையான குன்றைப் போன்ற யானை, இங்குலிகக் குன்றம் போல் தோன்றுகின்றது! என்று, புலவர் பொய்கையார் பாடுகின்றார்! என்றால், சங்க காலத்தில் சாதிலிங்கத்தின் பயன்பாடு அதிக அளவில் இருந்தது என்றே கருதலாம்.

சுளுந்தீ புதினத்தில் தமிழ் மருத்துவ முறைகள்

18 வகை சன்னி தீரும் மருத்துவம்

“பூதம் செந்தூரமாக்க 5 விரக எடை அளவு எடுத்து எருக்கம்பாலில் இரண்டு சாமம் ஊறவச்சா சுத்தி, கொடி பூதம், எருக்கம் பாலுடன் கொடிவேலிவேரு சாத்துல ஒரு சாமம் அரைச்சு காய வச்சத வெற்றிலை ஒரு சாமம் அரைச்சா பூதம் தண்ணியா

மாறும். உப்பு, கந்தகம் சேர்க்காத அட்டகிராம் சக்கரை, பாறை இடுக்குகளில் திட்டுத்திட்டாகக் கோர்த்து நிற்கும் கூகை நீர் இதுகளை விட்டு கழுவத்தில இரண்டு சாமம் அரைத்து கடைசியாக அரிசி சோத்துல மூன்று சாமம் அரைத்து சுடாத மண்சட்டியில் நிழல் காய்ச்சலாக காயவை. காய்ந்த பின்பு எடுத்து உலமூடியில கலயத்தில் உள்ளே வைத்து அதன்மேல் அதே அளவுள்ள கலயத்த வைச்சு, கலய வாப்பாடுத் தெரியாமல் களிமண்ணால் குழைத்துப் பூசு. அதன் மேல் களி மண்ணைக் குழைத்து துணியில் தடவி வாப்பாடு தெரியாமல் களிமண்ணால் குழைத்துப் பூசு. 4, 5 முறை இப்படி மண் கவசமாச் சுத்துப் போடு. இப்படி மண்கவசம் போடலனா புடம் போடும் போது கலையத்த உள்ள வைச்ச மருந்து ஆவியாகிவிடும். இந்த புடத்துக்குப் பேரு குக்கி புடம், 15 எருவாட்டி வைத்துப் புடம் போட பூதம் செந்தூரமாகும். அதை எடுத்து குழி அம்மிக் கழுவத்துல அரைச்சு அரிசி எடை ஒரு மண்டலம் தேனில் குழப்பி வெறும் வயித்துல சாப்பிட்டா பதினெட்டு வகை சன்னி தீரும் என சித்தர் சொல்லச்சொல்ல பூதம் தயாரித்து முடித்தான் ராமன்"

இதன்வழி பதினெட்டு வகையான சன்னி நோய் எனப்படும் வெப்பு அல்லது சுரம் நோய்க்கு மருத்துவமும் மருத்துவமுறைகளும் மற்றும் மருந்து தயாரிக்கும் முறை குறித்தும் மருந்து வழங்கப்பட வேண்டிய முறைகள் குறித்து இப்புதினத்தில் குறிப்பிட்டுள்ளமையை இதன்வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

கால்நடை மருத்துவம்

"ராமன் பன்றிமலை போனான் இவன் எதிர்பார்த்தது போலவே சித்தர் பொடவில் இருந்தார். அவரை வணங்கி விசயத்தைச் சொன்னான். கெடாரிகளுக்கு வெப்பாளப்பு, பூவரசம்பூ, உசில இலைகளை ஒரு மண்டலம் தீவனமாகக் கொடுத்து, உசிலை மர நிழலில் கட்டி வச்சா சினை பிடிக்காமல் கடைசி காலம் வரை அரைப்படி பால் கொடுக்கும். பட்டென சொன்ன பதிலைக் கேட்டு மிரண்டு சித்தர் திசையை நோக்கி விழுந்து கும்பிட்டுக் கிளம்பினான்"

இதன்வாயிலாக சுளுந்தி நாவல் மனிதர்களுக்கு மட்டுமின்றி பிற உயிர்களுக்கும் சித்தரின் தமிழ் மருத்துவமுறையினை இந்நாவல் வெளிக்கொணர்ந்துள்ளதனை அறியமுடிகிறது. பருவத்தே சினை பிடிக்காத மாடுகளும், களைமாடுகள் கிடைக்கப்பெறாத போது பால்பொருள்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படக்கூடாது என்பதன் நோக்கில் இம்மருத்துவ முறையை சித்தர் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாக அமைகிறது.

மார்பக மருத்துவம்

“குணமாகிட்டேன் சாமி என நிமிர்ந்து வந்தவள். குனிந்து வணங்கி நன்றி சொன்னாள். தயக்கத்துடன் ஏதோ கேட்பதற்காக நிற்க சொல் ஒற்றை வாத்தையில் சொன்னார். சிறுத்த மார்பு பெருக்க பண்டுவம் சாமி என்றாள். குளத்தில் பிடிக்காத மீன் பெருகும் கைபடாத முலை சிறுக்கும். நீங்க விறலியர்கள் என்பதால பேய்பீக்க இலையைக் கசக்கி மார்பில் தேச்சா மடி கணக்கும். ஆனா கனத்தமடி சிறுக்க பண்டுவமில்லை என்று சொல்லி பொடவில் படுத்தார்”

அரண்மனையில் வசிக்கும் விறலியர் பெண்கள் மார்பகம் பெருக்க தமிழ் மருத்துவ முறையை சித்தர் கூறுவதாக இந்நாவல் கூறுவதிலிருந்து, தமிழ் மருத்துவமானது அனைத்து விதமான நோய்க்கும் மருந்துள்ள மருத்தவம் என்பதை இதன் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

இரத்த மூலத்திற்கான மருத்துவம்

“செட்டியின் கை நாடி பிடித்துப் பார்த்து இந்த நோய்க்கு தேவையான சீன தேசத்து மருந்தான கசகசா அபினி, கோஷ்டம், வங்கம், சீனிகாரம், ஓமம் தொட்டிப் பாசானம் கைவசம் இல்லை. வர்ற அமாவாசைகுள்ள மருந்து செய்து வைக்கிறேன். தை கடைசிக்கு வாங்க. தற்போதைக்குப் பிரண்டையத் தட்டி காய வைத்து இடித்து துணியில சலிச்சு அதில் சம அளவு சர்க்கரை சேர்த்து நெய்யில் குழப்பி சாப்பிடுங்க மலச்சிக்கல், கடுப்பு ஓரளவிற்கு நீங்கும். உரலில் நெருப்பு கங்கப் போட்டு ஆமை ஓட்ட நுணுக்கி அதுல தூவினால் சாம்பிராணிப் புகைபோல் கிளம்பும். அந்த புகையை மலத்துவாரத்தில் காட்டினால் ரணம் குறையும். என்று பண்டுவம் சொன்னார் சித்தர்”[13].

இரத்த மூலம் மற்றும் கொடி மூலம் போன்ற நோய்களுக்கு எளிய தமிழ் மருத்துவ முறைகளைக் கூறியுள்ளார் சித்தர். இம்மருத்துவ முறை இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மோது (உள்காயம்) - மருத்துவம்

“ஆற்றங்கரைக்குத் தெற்கே சிலர் மஞ்சள் சாரைப்பாம்பினைப் பிடித்து வயிற்றைக் கிழித்து அதில் இருந்த கொழுப்பை எடுத்து கலயத்தில் சேகரித்தார்கள். பார்த்த பாதிரியார் அவர்களிடம் விளக்கம் கேட்டார். அடிபட்டு மோது கட்டின இடத்தில் இந்தக் கொழுப்பை உருக்கித் தடவி வந்தால் ஒரு மாதத்தில் மோது கரைந்து விடும் சாமி, பாம்பு உரித்திடும் வேலையில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டனர். இவர்கள் சொன்னதை ஓலையில் குறிப்பாக எழுதிக் கொண்டார் பாதிரியார்.”

மேற்கண்ட கூற்றானது சித்தர் அல்லாது பொதுமக்கள் கூறும் மருத்துவக் குறிப்பாக இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. மேலும் அடிப்பட்ட இடத்தில் ஏற்படும் உள்காயத்திற்கு மருத்துவமும் மருந்து தயாரிக்கும் முறையையும் இது விளக்குவதாக அமைந்துள்ளது.

பாம்பு கடி மருத்துவம்

"பிள்ளையார் நத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பேரை பாடை கட்டுவது போல் தூக்கி பன்றிமலை சித்தரிடம் வந்தார்கள். சாமி பொத்தக் கள்ளி மரத்தில இருக்கும் சுருட்ட பாம்பு கடிச்சிருச்சு. குலநீக்க மானவங்களப் பிடித்து சங்கிலிகக் கரட்டில் கட்டி தொங்க விட்டு கொல்றாங்க. இதுக்குப் பயந்து வீடு தங்காம செஞ்சரளைக் கரடுகளில் இருக்கும் பொத்தக் கள்ளி மரத்திலேறி மறைஞ்சிருந்தப்பக் கடிச்சிருச்சி என்று சொல்லி அழுதார்கள். பூர செந்தூரத்த இஞ்சி சாற்றில் கலக்கிக் கொடுப்பதற்கு முன்பாக சிரியா நங்கை கசாயத்தைக் கொடு என்றார் சித்தர். சிரியா நங்கை இலையை நறுக்கி ஒரு படித் தண்ணீரில் போட்டு அதை அரைவீசம்படியாகக் காய்ச்சி கசாயம் இறக்கினான் ராமன். பாம்பு கடித்தவனுக்குக் கொடுத்து பூர செந்தூரத்தக் கொடுத்தான். அரை நாழிகையில் கடி வாயில் இருந்து ரத்தக் கசிவு நின்றது. அவர்களிடம் பதவலை கட்டியிருந்த இடத்தில் இருக்கும் நெரிக்கட்டியில் வலி குறைந்து இருக்கான்னு ராமன் கேட்க குறைந்ததாக அவர்களும் சொன்னார்கள். பல் ஈறில் கசிந்த ரத்தக்கசிவு மட்டுப்பட்டு தலைநடுக்கம் குறைந்ததாகச் சொன்னார்கள். இந்த ஆள் பொழச்சிருவான்னு பாம்பு கடித்து தூக்கி வந்தவர்கள் சொல்லிக்கொண்டார்கள். அப்போது சித்தர் பொடவிலிருந்து பார்க்க, அவர் அருகில் கைகட்டி நின்றான் ராமன்". மேற்கண்டக் கூற்றானது பாம்பு கடித்தபின் மேற்கொள்ளப்படும் சித்த மருத்துவமுறைகளையும். மருந்து தயாரிக்கும் முறையையும் விளக்குவதாக இக்கூற்று அமைந்துள்ளது. இவ்வகையான நடைமுறை இன்றளவும் கூட கிராமங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கருத்தரிக்கும் மருத்துவம்

"மறுநாள் காலையில் மனைவி வல்லத்தாரையைச் சித்தர் முன்பு நிறுத்தினான். நாடி புடித்து பார்த்த போது சித்தர் கலியாணம் முடிஞ்சு பத்தாண்டா குழந்தை இல்லாத வேதனைய நீ பொருட்படுத்தாம இருந்ததே நோய் முத்திப் போனதற்குக் காரணம். உன் பொண்சாதிக்கு தனம் முண்டு பாஞ்சு போயிருக்கு. எட்டு நாள் சூரியன் முகம் பார்க்கும் முன்பு சித்திரக் குளத்தில முங்கிக் குளிச்சு மாவிலிங்க வேர், மிளகு சின்ன சீரகம் ஈரங்காயம் இதுகள இடிச்சு சாறு பிழிஞ்சு வீசம்படியா வெறும் வயிற்றில் குடித்து புளியமர நிழல் படாமல் உசில மரத்தடியில் படுத்து உறங்க சொல். அரைமண்டலத்துல்

உடலில் மாற்றம் வரும். பர்ணசால விடுதியில ரெண்டு பேரும் தங்கவும் எனக் குறிப்பறிந்து உத்தரவு கொடுத்தார். தங்காத ராமன் சித்தர் சொன்னதால் மனைவியுடன் தங்கினான். சித்தர் சொல்படி வல்லதாரை மருந்தைக் குடித்து வந்தாள்."

மேற்கண்டக் கூற்றின் வாயிலாக மனித உடலில் நடக்கும் இயல்பான மாற்றங்களை நாடி பிடித்துப் பார்த்து அறிவியல் கண்ணோட்டத்துடன் மருந்தினையும் மருத்துவமுறையினையும் விளக்கியுள்ளமையை அறியமுடிகிறது. இதன்வழி சித்தர்கள் என்பவர்கள் மருத்துவத்தினை உடலியல் சார்ந்த நுட்பங்களுடனும் தொடர்புப்படுத்தி மருத்துவத்தினை அறிந்துவைத்துள்ளனர் என்பதும் அறியலாகிறது.

தீக்காயத்திற்கு மருத்துவம்

கொஞ்தூரம் போன லக்கையன் திரும்ப வந்து தீக்காயத்திற்கு மருந்து கேட்டுப் போக வந்தேன். சித்தர் சமாதி நிலையில் இருந்தாரு ராமா என்றார். இதை என்கிட்ட கேட்டிருக்கலாமே சாமி விளக்கெண்ணெயில சுண்ணாம்புத் தண்ணிய கலந்தா எண்ணெய் தண்ணீரா மாறும் கோழி இறக்கைகளைத் தொட்டுப் புண்ணில தடவுங்க எரிச்சல் உடன் நிற்க்கும் காயப்பட்ட இடம் ஒரு மண்டலத்தில் பழைய மேனி மாறிடும் எனச் சொல்ல சரி ராமா என்று சொல்லிக் கிளம்பி நடந்தான்.

தாம்பத்திய மருத்துவம்

"தூரத்திலிருந்தபடியே கையசைத்துக் கூப்பிட்ட லக்கையன், அருகில் போன ராமனிடம் காதில் கிசுகிசுத்தார். அரண்மனைகளப் பிடிச்சுள்ள நோயே இதான் என நினைத்தவன், சாமி. வார்த்தையை நீட்டி எட்டிக் கொட்டை பருப்பு, அமுக்ரா வேர் இத பசும்பாலில் மை போல அரைச்சு தண்டில் மூணு நாள் தடவி வந்தா, தண்டு கெட்டி பெறும். இது தயாரிக்க சிரமமா இருந்தா தாழம்பூவிலிருக்கும் விபூதிய எடுத்து அதில் கோழி முட்ட வெள்ளக்கரு சேத்து வழுவழுன்னு அரைச்சு தண்டில் பூசுங்க. அரநாழிகையில தண்டு கெட்டியாகும். களிதம் விரசா வராது. இதுவும் தயாரிக்க முடியாதின்னா ராவுத்தமார்கிட்ட குங்குமப்பூ வாங்கி நல்லெண்ணெயில அரைச்சு தண்டில பூசுங்க. தாம்பத்திய சுகம் தரும், என்று மடமடவெனச் சொன்னான். எப்போதும் ராமனை மதிக்காத லக்கையன் முதன் முதலாகக் கும்பிட்டு என்ன ராமா, பூசாரி கோடாங்கி நாயக்கன் போல. கைத் தண்டையெல்லாம் புதுசா போட்டிருக்க, என்று கேட்சு சித்தர் கொடுத்த குருவங்கொல அத வாட்டிப் போட்டிருக்கேன்."

மேற்க்கண்ட கூற்றானது அரண்மனையில் வசிக்கக்கூடிய அரசன், தளபதி போன்றோர் பல துணைவியருடன் கூடுபவர்கள் ஆதலால் அவர்களின் ஆண்மை விருத்தியடைவதற்கான மருந்தினையும் மருத்துவமுறையையும் ராமன் கூறியுள்ளமையை இதன்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

பல்வலி மருத்துவம்

'ராமா எனக்கு ஈறில ரத்தமா வடியுது' எனச் சொல்ல, 'நில்லுங்க சாமி வற்றேன்! பர்ணசாலையில் இருந்த துத்தத்தை எடுத்து வந்து 'இத நுணுக்கீச் சம அளவு சோத்து உப்பு கலந்து பல்ல விளக்குங்க கையில் புடுச்சது மாதிரி கேட்கும். ரெண்டு நாழிகைக்கு நாக்கு மதமதவென இருக்கும் பயத்திடாதிங்க, வாய் துர்நாத்தம் மறைஞ்சிடும்' என்றவன், மருத்தை அவர் கையில் கொடுத்தான். அதை வாங்கி ராமனைப் பார்த்தபடி "மகா பண்டுவனாகிட்டப்பா உன்னைப் பண்டுவனாக்க அனுமதிச்ச நம்ம அரண்மனைய மெச்சனுமப்பா என்று சொல்லியபடி நகன்றான் லக்கையன்."

இக்கூற்றின்படி ராமன் கூறிய மருத்துவத்தைக் கண்டு அவனும் சித்தர் போல மருத்துவம் கூறியதையும். அது மற்றவர் போற்றும் வகையில் மருத்துவமுறை உள்ளதையும் அறியலாம்.

வடுக்கள் மறைவதற்கான மருத்துவம்

"நெற்றியில் கம்பி குத்தி காயம் ஆறிருச்சு. ஆனா தழும்பு பெரிசா இருக்கு. அத மறைக்க மருந்து இருக்கான்னு கேட்டு வரச்சொன்னாரு என்றான். சேவல் கொழுப்ப எடுத்து அத காய்ச்சி, சீசாவில் எடுத்து வைச்சு, ராத்திரி படுக்கும் போது ரெண்டு மண்டலம் தடவி வரச்சொல்லுங்க. தழும்பு தானா கரைஞ்சு மறையும் எனச் சொல்ல, ராமனுக்கு வணக்கம் சொல்லிக் கிளம்பினான் ஆலிவர்."

இக்கூற்றின்படி ராமன் கூறிய காயத்தின் வடு மறைவதற்கான மருந்தினையும் மருத்துவத்தையும் கூறுவதை அறியமுடிகிறது.

வயிற்றுப்பூச்சி, சிறுநீர் ரத்தக்கசிவு, சளி- மருத்துவம்

"எனக்கு அப்பப்ப வயிறு வலி வருது. வலி வந்தா தூக்கில தொங்கிச் செத்திடலாம் போல இருக்கு, 'ஒரு பண்டுவம் சொல்லப்பா' என்றார். சாமி வயித்தில் கீரிப்பூச்சி வளர்த்திருக்கும். வேலிப் பருத்தி சாத்த அலக்களவு பிழிஞ்சு சம அளவு எள்ளெண்ணெய் கலந்து வெறும் வயித்தில குடிங்க மலத்தோடு பூச்சி வெளியேறி சரியாகும் சாமி' எனச் சொல்ல. 'நல்லது ராமா, கையோட இன்ன ரெண்டு பண்டுவம் சொல்லு என் மச்சினனுக்கு மூத்திரத்தில் ரத்தம் கலந்து போருது', 'காலையில் வெறும் வயிற்றில் விராலியிலைக் கொழுந்த பிடிங்கி அதோட புழுங்கலரிசிய மென்னு எச்சிய முழுங்கினா கையில புடிச்சதுப் போல தீரும் என்று சொல்லியபடி குதிரை அருகில் போனான் ராமன். 'என் பேத்தியா ஆறு மாச குழந்த அவளுக்குச் சளித் தொல்ல. அதுக்குச் சேர்த்துப் பண்டுவம் சொல்லிட்டு போப்பா அடுத்த பண்டுவத்தக் கேட்டார். சாமி, அகத்திப் பட்டைய தண்ணியில காய்ச்சி, அத இறுத்து பசும்பால காய்ச்சி

ரெண்டையும் கலந்து அரைச் சங்கு மூணு நாள் ஆறு வேளை கொடுக்கச் சொல்லுங்க. இல்லேன்னா பச்ச மீன் முள் எடுத்து நெய்யில் போட்டு, நெய் முறிய கொரிக்க வறுக்க, வடிகட்டி, சுடுசோத்தில இத்த நெய்ய ஊத்திப் பிசஞ்சு கொடுங்க. பால் குடிக்கிற பிள்ளையா இருந்தா மருந்த தாய்க்காரிய சாப்பிடச் சொல்லுங்க என்று ராமன் சொல்லுவதைக் கவனமாகக் கேட்டவர் இரண்டு எட்டு வைத்து நின்று திரும்பி, 'என்னா ராமா, வார்த்தைக்கு வார்த்த குலநீக்கமானவன் போல சாமி சாமின்னு சொல்லுறவன் என்றார்'. 'அரண்மனையார சாமியின்னு கூப்பிட்டுப் பழகின. நாக்கு மாற மாட்டீங்குது. உங்கள சாமியின்னு சொன்னா நான் கொறஞ்சா போயிருவேன்' என ராமன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தபடி கிளம்பினான் பொன்மணி."

இக்கூற்றின்படி ராமன் மூன்று விதமான நோய்களுக்கும் பலவகையான மருத்துவத்தினைக் கூறியதைக் கண்டு அவனும் சித்தர் போல மருத்துவம் கூறியதையும். அது மற்றவர் போற்றும் வகையில் மருத்துவமுறை உள்ளதையும் இதன்வழி அறிந்துகொள்ளமுடிகிறது.

மேலும் கைகளில் தோன்றும் வெடிப்பு, இரத்தக்கசிவு மற்றும் வாத நோய்களுக்கு மருத்துவமும். இந்நோய்க்கு என்ன வகையான மருந்து பயன்படுத்தவேண்டும் என்பதையும் ராமன் மருத்துவம் கூறுவதைக்கொண்டு அறியமுடிகிறது.

முடிவுரை

சுளுந்தீ புதினத்தில் தமிழ் மருத்துவமுறைகளும் தமிழ் மருத்துவம் குறித்தும், சித்தர், நாவிதர் ராமன், மருத்துவச்சி செல்லம்மாள் எனும் மூன்று பாத்திரங்களின் வாயிலாக அகமருத்துவம், புறமருத்துவம், என்னும் இரு நிலைகளில் இப்புதினம் விளக்குகிறது. அகமருத்துவம் மற்றும் புறமருத்துவம் இவைகள் அஃறிணை, உயர்திணை என்னும் இரண்டு கருத்தியல்களில் இப்புதினம் மருத்துவமுறைகளை முன்னெடுக்கிறது. அகமருத்துவம் எனும் முறையில் உடல் உள்ளுறுப்புகள் சார்ந்த நோய்களான கருத்தரித்தல், வெட்டவாயு, ஓரண்டவாயு மற்றும் பல்வலி, ஆண்மைக் குறைபாடுகளைக் களைதல், ஆணுறுப்பு பெரிதாதல், மற்றும் இந்தீரியம் அதிகரித்தல், பெண்களின் மார்பகம் பெரிதாதல் என்பன போன்ற நோய்களுக்கு மருத்துவமுறைகளையும் மருந்துகளையும் மற்றும் மருந்து தயாரிக்கும் முறைகளையும் மேலும் மருந்துண்ணும் முறைகளையும் இப்புதினம் விளக்குகிறது. புறமருத்துவம் என்னும் நிலைகளில் கைக்கால் வீக்கம், தீக்காயத்திற்கான மருத்துவம், வெட்டுக்காயம், இராசபிளவு, முதுகுத்தண்டுவட வளைவு நீக்கம் என்பன போன்ற புற நோய்களுக்கு மருத்துவமுறைகளையும் மருந்துகளையும் மற்றும் மருந்து தயாரிக்கும் முறைகளையும் மற்றும் மருந்துண்ணும் முறைகளையும் இப்புதினம் விளக்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. கழக வெளியீடு. *பதிற்றுப்பத்து மூலமும் உரையும்.* திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1950.
2. கழக வெளியீடு. *களவழிநாற்பது மூலமும் உரையும்.* திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1924.
3. இரா, முத்துநாகு. *சுளுந்தீ.* திருவண்ணாமலை, ஆதி பதிப்பகம், 2021.

REFERENCES

1. Kalaga Velidu. *Patiruppattu source and text.* Tirunelveli, Saiva Sithantha Norkalagam, 1950.
2. Kalaga Velidu. *Kalavaali Naarpadu source and text.* Tirunelveli, Saiva Sithantha Norkalagam, 1924.
3. R, Muthunagu. *Sulundhi.* Thiruvannamalai, Adi Publishing House, 2021.